செ. கு. எண்: 134 நாள் :09.11.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 9.11.2015

தமிழகத்தில் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், ஏகாட்டூர் கிராமம், கங்கையம்மன் கோயில் தெருவில் சரவணா பேக்கரி கட்டடத்தின் முதல் தளத்தில் புதியதாக கட்டப்பட்டிருந்த ஹாலோ பிளாக் சுவர் 8.11.2015 அன்று பின்புறம் அமைந்திருந்த சமையற்கூடம் மீது விழுந்ததில், சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த மதுரை மாவட்டம், மேலூர் வட்டத்தைச் சேர்ந்த திரு கருப்பையா என்பவரின் மகன் சேவகப்பெருமாள் மற்றும் திரு ராஜேந்திரன் என்பவரின் மகன் விக்னேஷ் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த சேவகப்பெருமாள் மற்றும் விக்னேஷ் ஆகிய இரண்டு நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுவர் இடிந்து விழுந்ததில் இரண்டு நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், காயமடைந்த இருவருக்கு தலா ஐம்பது ஆயிரம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரணநிதியிலிருந்தும் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**